# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.86/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 19 | நாள் | : | 05.03.2026 |
| பெயர் | : | சிவலிங்கசேகர் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 05th day of March 2026.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் தற்போது காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 21.10.2017 ம் தேதி வாசுதேவநல்லூர் காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்தபோது வாசுதேவநல்லூர் காவல் நிலைய கு.எண்.247/2017 வழக்கின் சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 307, 506(2) இதச பிரிவுகளின் கீழ் சார் ஆய்வாளரிடமிருந்து பெற்று 13.15 மணிக்கு எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சி மனோகரன், முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயாரித்த வரைபடம் **அ.சா.ஆ.14** ஆகும். பின்னர் வழக்கின் புகார்தாரரான மாரியம்மாள், மனோகரன், முருகன், சார் ஆய்வாளர்

ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 15.30 மணிக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் வழக்கின் எதிரி மாரிச்சாமி என்பவர் தங்கப்பழம் பாலிடெக்னிக் மேல்புறம் உள்ள ஓடை பகுதியில் தலைமறைவாக இருந்தவரை போலீசாருடன் சென்று 15.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் சாட்சிகள் ராஜா, பால்பாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியுள்ளபடி 16.15 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த இரத்தக்கறையுடன் கூடிய 50.5 செ.மீ. கொம்பு கைத்தடியுடன் கூடிய முனையில் முறிந்த நிலையில் இருந்த அரிவாள் ஒன்றை கைப்பற்றினேன். பின்னர் எதிரியுடன் 16.45 மணிக்கு நிலையம் வந்து வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். ராஜ், பால் பாண்டி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 22.10.2017 ம் தேதி செல்வக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சிகிச்சையிலிருந்த நபர் இறந்துவிட்டதால் 23.10.2017 ம் தேதி திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை நடத்தினேன். நான் நடத்திய பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.15** ஆகும். பின்னர் இறப்பின் அறிவியல் காரணம் அறியும்பொருட்டு காவலர் திரு.வெங்கடேஷ் என்பவர் மூலம் சடலக்கூராய்விற்கு மருத்துவ அலுவலர்களுக்கு

வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 24.10.2017 ம் தேதி மேற்படி வெங்கடேஷ் என்பவர் சடலக்கூராய்வை முடித்து அவரிடம் ஒப்படைக்கப்பட்ட சடலத்தின் மீது இருந்த உடைகளை என்னிடம் ஒப்படைத்தார் அதை படிவம் 91 ன் மூலம் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சடலத்திலிருந்து கைப்பற்றப்பட்ட வேஷ்டி **சா.பொ.4** ஆகும். இவ்வழக்கின் கைப்பற்றிய சொத்துக்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்றுத் தரும்படி வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். நான் கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.16** ஆகும். திரு.வெங்கடேஷ் என்பவர் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு சொத்துக்களை எடுத்து ஒப்படைக்க கடவுச் சீட்டு வழங்கினேன் நீதித்துறை நடுவர் எனது வேண்டுகோளின் அடிப்படையில் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பிய கடிதம் **அ.சா.ஆ.17** ஆகும். என்னுடைய உத்தரவுப்படி காவலர் 31.10.2017 ம் தேதி திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகம் சென்று நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட பொருட்களை ஒப்படைத்து நிலையம் திரும்பி அறிக்கை செய்தார். 01.11.2017 ம் தேதி சாட்சிகள் அஜித், கணேசன் என்ற அமாவசை, செல்லப்பா, செல்லக்கண்ணு ஆகியோர்களை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். 19.11.2017 ம் தேதி எதிரியின் மனைவி கவிதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 05.01.2018 ம் தேதி இவ்வழக்கின் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சடலக்கூராய்வு செய்து சான்று வழங்கிய மருத்துவர் சீதா லட்சுமி என்பவரையும் மற்றும் மருத்துவர் நாகலட்சுமி என்பவரையும், முதலுதவி சிகிச்சையளித்த சிவகிரி

மருத்துவர் வேல்ராஜன் என்பவரையும் விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காவலர் வெங்கடேஷ், மற்றும் காவலர் ராமஜெயம் ஆகியோர்களையும் தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 01.02.2018 ம் தேதி இவ்வழக்கின் சாட்சிகள் மாரியம்மாள், மற்றும் செல்வக்குமார் ஆகியோர்களை விசாரித்தபோது அவர்கள் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுக்க விரும்பியதாக கூறியதால் அதனை பதிவு செய்து தரும்படி வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன்( எதிரி தரப்பில் அ.சா.1 ,3 சாட்சியத்தின்போது கூறாத சங்கதிகள் என்று ஆட்சேபிக்கப்பட்டது) நான் கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.18** ஆகும். நீதிமன்றத்தில் மேற்படி சாட்சிகள் மாரியம்மாள், செல்வக்குமார் கொடுத்த வாக்குமூலம் **அ.சா.ஆ.19 மற்றும் 20** ( ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) ஆகும். 01.03.2018 ம் தேதி வட்டார அறிவியல் ஆய்வக பகுப்பாய்வாளர் திரு.விஜேயேந்திரன், திருமதி ஆனந்தி ஆகியோர்களை விசாரித்து அவர்களிடமிருந்து அறிக்கை பெற்று விசாரித்தேன். சிவகிரி நீதித்துறை நடுவர் நீதிமன்ற தலைமை எழுத்தர் திரு.கணேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வட்டார தடய அறிவியல் ஆய்வாளர் அனுப்பிய அறிக்கை **அ.சா.ஆ.21** ஆகும். குருதி வடிநீரியல் அறிக்கை **அ.சா.ஆ.22** ஆகும். 23.10.2017 ம் தேதி சட்ட மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் அது **அ.சா.ஆ.23** ஆகும். பின்னர் நான் சேகரித்த சாட்சியங்கள் மற்றும் வாக்மூலங்களின் அடிப்படையில் எதிரி மீது குற்றபத்திரிக்கை தாக்கல் செய்ய போதிய முகாந்திரம்

காணப்பட்டதால் மாற்றப்பட்ட சட்ட பிரிவுகளின் அடிப்படையில் 24.03.2018 ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். சாட்சிகள் செல்லப்பாவும், கணேசனும் என்னுடைய விசாரணையின்போது சம்பவத்தை கேள்விப்பட்டதாகவும், முன்விரோதம் இருந்ததாகவும் அவர்கள் இருவருக்கும் சமரசம் செய்து வைத்ததாகவும் கூறிய விவரங்களைத்தான் வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

அ.சா.1 என்னுடைய விசாரணையில் பணம் வாங்குவதற்காக சென்றாரா அல்லது பஞ்சயாத்தார்களிடம் சொல்வதற்காக சென்றாரா என்றால் பணம் வாங்குவதற்காக சென்றதாக கூறியுள்ளார். இறந்தவரும், அ.சா.1 , 3 ம் சேர்ந்து பணம் வாங்கச் சென்றதாக கூறினார்களா என்றால் முதலில் இறந்தவரும் அதன்பின்னர் அ.சா.1, 3 ம் சென்றதாக தெரியவந்தது. அ.சா.1 மற்றும் இறந்தவர் சேர்ந்து இருவர் மட்டுமே பணம் வாங்கச் சென்றதாக சாட்சி என்னுடைய விசாரணையில் கூறியிருந்தால் அது தவறாகும். இறந்தவர் அ.சா.1 யை செல்லும்படியும் நான் பேருந்து நிறுத்தத்திலிருந்து பின்னர் வருகிறேன் என்று என்னுடைய விசாரணையில் கூறவில்லை. அ.சா.1 நிழற்குடையில் இருந்து 20 அடி தூரத்தில் சென்று கொண்டிருந்தபோது சத்தம் கேட்டு திரும்பி பார்த்ததாக எனது விசாரணையில் கூறவில்லை. சம்பவத்தை கண்ணுற்ற அ.சா.1 மயங்கி விழுந்துவிட்டதாக எனது விசாரணையில் கூறவில்லை. இறந்தவர் நிழற்குடையில் அலைபேசியை பார்த்துக்கொண்டிருந்த போது சம்பவம் என்று என்னுடைய விசாரணையில்

கூறவில்லை. இறந்தவர் காயம்படும்போது அவர் செயின், மோதிரம், பட்டன் செல் வைத்திருந்ததாக என்னுடைய விசாரணையில் சாட்சிகள் யாரும் கூறவில்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து நான் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை. காயம்பபட்வருடைய கைலியை அவரது சகோதரர் செல்வக்குமார் வைத்திருந்ததை 23.10.2017 அன்று திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துமனையில் வைத்து ஒப்படைத்தார். கைலியை ஒப்படைத்தபோது காயம்பட்டவர் இறந்துபோனார். கைலி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக கூறப்படும் படிவம் 91ல் 22.10.2017 அன்று தேதி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கைப்பற்றும் 23.10.2017 ம் தேதிக்கு முன்பாகவே 22.10.2017 அன்று அனுப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது தவறாகும். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் கொலை முயற்சி என்ற வாசகத்தில் "முயற்சி" என்ற வாசகம் இடைச்செறுகலாக உள்ளது என்றால் சரிதான். சாலையில் கிழக்கே வீடுகள் இல்லை மேற்கே மட்டுமே உள்ளது. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்ததாகவும் அவர் தானாக வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக கூறுவதும் அதனடிப்படையில் அவர் ஆயுதங்களை எடுத்துக் கொடுத்ததாக கூறுவதும் அதை நான் சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் எடுத்துக் கொடுத்ததாக கூறுவதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. பொங்கல் செல்வம் தற்போது ஊரில் உள்ளாரா என்று எனக்கு தெரியாது. எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி மீது முறையாக

விசாரணை செய்யாமல் தவறான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது புலனாய்வு ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.03.05 16:45:15 +0530